# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2041 (ஆடி-ஆவணி) அகஸ்ட் 2010 ஏர்-25, உழவு-8, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பி.சென்னியப்பன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : BRT.சென்னியப்பன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | செல்வி ஃபீட்ஸ் கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்


| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| செயலாளர் அறிக்கை | - | 3 |
| செட்டிகுளம் சின்ன நிலம் | - | 5 |
| அமராவதி நீர்பாசனம் | - | 8 |
| மாணவர்கள் சந்திப்பு | - | 12 |
| வாழ்த்துகிறோம் | - | 13 |
| வேண்டும் வரம் | - | 14 |
| பால் மறத்தல் | - | 15 |
| வானம் தொடலாம் வாங்க | - | 18 |
| கொங்கு திருமணமாலை | - | 21 |
| இன்றைய விவசாயின் நிலை என்ன ? | - | 22 |
| மணமகள் தேவை | - | 23 |
| மணமகள் தேவை | - | 24 |
| மணமகன் தேவை | - | 30 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



தீரன் சின்னமலை மாளிகை கட்டிட வேலை முடியும் தருவாயில், கொங்குநாடு அறக்கட்டளை பங்கை சங்கத்தின் பெயருக்கு எழுதிவாங்கும்அவசியமும் அவசரமாகியுள்ளது. அதற்கு தேதி குறித்து ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அடுத்த இதழில் தீரன் சின்னமலை மாளிகை, சங்கத்தின் முழுச் சொத்து என்ற சந்தோஷத்தைக் கண்டிப்பாக உங்களோடு பகிர்ந்து கொள்வேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை என் லட்சியமாகக் கொண்டிருக்கிறேன். குடும்பவிழா நடத்த எல்லோருக்கும் ஆசை, இருந்தாலும், தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த ஆண்டு கைவிடப்பட்டு குழந்தைகள் விழா ஆகஸ்ட் 1ம் தேதியும், விளையாட்டு விழா ஆகஸ்ட் 8ம் தேதியும் நடத்த செயற்குழு முடிவு செய்துள்ளது. இவ்விழாவில் நாம் எல்லோம் கலந்து பேசி மகிழவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தவறாமல் எல்லோரும் குழந்தைகள் மற்றும் விளையாட்டு விழாவில் கலந்துகொள்ள வேண்டும்.

அடுத்த மாதம் வருடாந்திர பொதுக்குழு கூட இருக்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்படவேண்டும். சமுதாய நோக்கோடு பணியாற்ற புதியவர்கள் பலர் தாங்களாக முன்வர வேண்டும். சமுதாயமென்பது நம் குடும்பம். நமக்காக கொஞ்சம் நேரம் ஒதுக்கிப் பணியாற்றத் தயங்கக் கூடாது. புதியவர்கள் வந்தால் தான் புதுபுது எண்ணங்கள் தோன்றி சங்கச் செயற்குழு புதுப்பொலிவு பெறும்.

யாருக்கு ஆவலிருக்கிறதென்று எங்களுக்குத் தெரியாது. பொதுக்குழு வரை வர விரும்புபவர்கள் காத்திருக்க வேண்டாம். என்னையோ, செயலாளர் அல்லது பொருளாளரையோ, செயற்குழு உறுப்பினர்களையோ விருப்பமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

சந்திப்போம் விளையாட்டு விழாவிலே !

நன்றி !

பி.சென்னியப்பன்
தலைவர்

❖❖❖❖❖

# செயலாளர் அறிக்கை

அன்புடையீர்,



வணக்கம். இந்த ஆண்டு குடும்ப விழாவை 22-08-2010 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை தேனாம்பேட்டை காமராசர் அரங்கில் சிறப்பாக நடத்துவது என்று செயற்குழு எடுத்த முடிவிற்கிணங்க, ஓர் ஆண்டிற்கு முன்பே காமராசர் அரங்க நிர்வாகியை அணுகி அந்தத் தேதியைப் பதிவு செய்தோம்.

காமராசர் அரங்கத்தில் தேதி உறுதி செய்தவுடன் ஆண்டுவிழாவைச் சிறப்பாக நடத்திடத் தேவையான நடவடிக்கைகளைத் தொடங்கினோம். காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்கள் 22-08-2010 அன்று சென்னை வருவதாகவும், காமராசர் அரங்கத்தில் காங்கிரஸ் கட்சி நிகழ்ச்சி நடைபெற உள்ளதாகவும், எதிர்பாராத இந்த நிகழ்வுகளால் காமராசர் அரங்கத்தை அன்றைய தேதியில் தருவதற்கு இயலவில்லை என்றும் அரங்க நிர்வாகி தெரிவித்துள்ளார். இந்தச் செயற்குழுவின் பதவிக்காலம் செப்டம்பர் மாதம் முடிவடைவதால், அதற்குள் குடும்ப விழாவை நடத்த வசதியான தேதியும், இடமும் கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக 06-07-2010 அன்று நடந்த செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, குடும்ப விழாவை இந்த ஆண்டு நடத்த வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் சங்கப் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் புதிய செயற்குழுவிற்கான தேர்தல் 26-09-2010 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

08-08-2010 ஞாயிற்றுக்கிழமை அன்று இராயப்பேட்டை வெஸ்லி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் மாலை **2** மணி முதல் **5** மணி வரை நடைபெற இருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் குழந்தைகள், மாணவ மணிகள், மகளிர், ஆடவர் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அன்று மாலை **6** மணிக்கு சிற்றுண்டிக்குப் பிறகு பரிசளிப்பு நடைபெறும்.

தாய் நாட்டிற்காகத் தன் இன்னுயிரை ஈந்த தியாக மறவன், கொங்கு நாட்டின் முதல் விடுதலைப் போராட்ட வீரன் பெயரால் அமைந்துள்ள தீரன் சின்னமலை மாளிகைக் கட்டிட நிதிக்காக தொடர்ந்து நன்கொடையளித்து வரும் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சங்கத்தின் செயல்பாடுகள் இன்னும் சிறப்பாக அமைய தங்களுடைய ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி !

பரணி கே.பாலசுப்பிரமணி
செயலாளர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 58,35,183 |
| 1015 | | பெஸ்ட் ராமசாமி | 1,00,000 |
| 1016 | 1829 | P.ரமேஷ் | 1,500 |
| 1017 | | S.கதிர்வேல் G.H. | 1,000 |
| 1018 | | மகேஷ் குமார் G.H. | 1,000 |
| 1019 | | ராதா தமிழ்மணி L.H. | 1,000 |
| 1020 | 0200 | K.N.தர்மராஜ் | 1,000 |
| 1021 | | K.பிரேம லதா L.H. | 1,000 |
| 1022 | | R.ரம்யா L.H. | 1,000 |
| 1023 | | R.ஈஸ்வரமூர்த்தி | 1,000 |
| 1024 | | M.P.A.மகாலிங்கம் | 1,000 |
| 1025 | | M.R.சந்திரசேகர் | 1,000 |
| 1026 | | K.மணிராம் G.H. | 1,000 |
| 1027 | | K.கருப்பசாமி | 1,000 |
| 1028 | | V.முருகசாமி | 1,000 |
| 1029 | | D.பூபதி | 1,000 |
| 1030 | | K.குமரேசன் | 1,000 |
| 1031 | | K.கலையரசி L.H. | 1,000 |
| 1032 | | A.சரண்யா L.H. | 1,000 |
| 1033 | 484 | M.சிவசண்முகம் | 1,000 |
| 1034 | | M.P.நடேசன் | 1,000 |
| 1035 | | P.பன்னீர்செல்வம் | 1,000 |
| 1036 | | N.சுப்ரமணி | 1,000 |
| 1037 | | C.கார்த்திக்கண்ணன் | 1,000 |
| 1038 | | R.காவியா L.H. | 1,000 |
| 1039 | | நர்மதா L.H. | 1,000 |
| 1040 | | M.ராஜமாணிக்கம் | 1,000 |
| 1041 | 3411 | R.ஜெயபால் | 1,000 |
| 1042 | 3412 | M.பொன்னம்பலம் | 1,000 |
| 1043 | 3414 | R.ஜோதிபாசு | 1,000 |
| 1044 | 3415 | M.சேகர் | 1,000 |
| 1045 | 3417 | R.பாலசுப்பிரமணி | 1,000 |
| 1046 | 3413 | N.R.கார்த்திக் | 1,000 |
| 1047 | 0215 | P.S.சுரேந்திரகுமார் | 1,000 |
| 1048 | 0214 | K.K.மோகன் குமார் | 1,000 |
| 1049 | 3416 | P.சந்திரசேகரன் | 1,000 |
| 1050 | 0213 | N.துரைசாமி | 1,000 |
| 1051 | 0217 | P.வெங்கடேசன் | 1,000 |
| 1052 | 0216 | S.இளங்கோ | 1,000 |
| 1053 | | P.R.சாந்திகா L.H. | 1,000 |
| 1054 | | M.B.விவேக் G.H. | 1,000 |
| 1055 | | செல்வி L.H. | 1,000 |
| 1056 | | J.கோகிலா L.H. | 1,000 |
| | | | 58,76,683 |

# செட்டிகுளம் சின்ன நிலம்

சென்ற இதழ் தொடர்ச்சி.... - பேராசிரியர் ப.க.பொன்னுசாமி

“பள்ளிபொரத்தில் கூத்தம்பூண்டியா குடும்பத்தில ஆரு விவரமானவுக, ஆரு விவரங் கெட்டவங்கறது ஊருக்குத் தெரியுமிடி! சும்மா சும்மா குத்திகிட்டே இருக்காத! சின்னஞ் சிறுசுகளத் தனியா விட்டுப்போட்டு நீ எதுக்கிடி சோத்தத் தூக்கீட்டு வந்த?” கடிவதுபோல நடித்துக்கொண்டே சின்னக் கண்ணைப் பார்த்த மகிழ்ச்சியைத் தன் தடித்த மீசையைத் தடவுவதில் வெளிப்படுத்திக்கொண்டான் கண்ணுச்சாமி !

கூத்தம்பூண்டி ஆத்தாள் குடும்பம் பள்ளியபுரத்தில் மூன்று அல்லது நான்காவது இடத்தில் வைத்துப் பார்க்குமளவில் ஓரளவுக்குச் சொத்து பத்துக்களைக் கொண்டது. கணவரைப் பத்தாண்டுகளில் இழந்துவிட்டு இருபது ஆண்டுகளாகக் ‘கூத்தம்பூண்டி ஆத்தாள்’ பட்டத்தோடு குடும்பம் தலை நிமிர்ந்து இருக்கச் சலியாது உழைத்துக் கொண்டிருப்பவர் கன்னியம்மாள். பதினைந்து ஏக்கர் நஞ்சையும், ஏழு ஏக்கர் தோட்டமும், பத்து ஏக்கர் புஞ்சையுமாக நிலங்கள். வசதியானஅளவுக்கு வீடு வேலைக்கு ஆட்கள், நல்லசாமி, கண்ணுச்சாமி, செல்லச்சாமி என்று மணியான மூன்று ஆண் பிள்ளைகள். மூன்று மக்களும் விவசாயத்தைக் கவனித்துக்கொள்ள, தனக்கும் ஒரு வேலையாக - ஊருக்குள் சிறிய அளவில் வட்டிக்குப் பணம் கொடுத்து-அண்டா குண்டாக்களோடு கடுக்கன், மோதிரம் போன்ற பொடி நகைகளை அடகாக வாங்கிக்கொண்டு, பத்தும் இருபதுமாகக் கடன் கொடுத்து அதிகமாகக் கறார் ஒன்றும் இல்லாமல், ஆனால் லாபத்தோடு கவுரவமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் அந்த அறுபது வயதுத்தாய்.

‘எப்பிடியும் கூத்தம்பூண்டி ஆயாகட்டப் போனாக் கஷ்டத்துக்குக் காசு கெடைக்கும்’ என்ற நம்பிக்கை பள்ளிபுரத்தில் மட்டுமல்லாது பக்கத்து ஊர்களிலும் உண்டு.

அண்ணன் தம்பிகளுக்குள் நல்ல ஒற்றுமை. பள்ளிப்படிப்பென்று மூவருக்கும் இல்லையென்றாலும்,தனியாக வாத்தியாரிடம் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டவர்கள். அதிலும் கண்ணுச்சாமி அதிகமான ஆர்வத்துடன் தொடர்ந்து வாத்தியாரிடம் போய்ப் படிப்பறிவை வளர்த்துக்கொண்டவன். மெல்ல மெல்லத் தானாகவே பாகவதம், இராமாயணம், மகாபாரதத்தை ராகம் கேட்டு உரத்தக்குரலில் படித்துக் காட்டிக் கேட்பவர்களை மகிழ்விக்கும் ஆற்றலை வளர்த்துக்கொண்வடன். ஏகாதசி, சிவன் ராத்திரி மற்றும் விசேஷ நாட்களில் மகனைப் படிக்கச் சொல்லி, பத்து இருபது வயதானவர்களைக் கூட்டிவந்து கேட்க வைத்து, அவர்களுக்கெல்லாம்

சுண்டலும் வரக்காப்பியும் கொடுத்து, வாசல் படியோரம் உட்கார்ந்து காலாட்டிக்கொண்டே பெருமைப்பட்டுக்கொண்டிருப்பார் கன்னியம்மாள். அப்போது அவரைப் பார்த்தால் அவருடைய உருவமும் பார்வையும் தாய்மைக்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் இருக்கும் ! அந்த நேரங்களில் பணம் கேட்டு வருபவர்களுக்கு நல்ல யோகமடிக்கும் !

ஆத்தாளுக்கு இப்போது இரண்டு கவலைகள். கல்யாணம் செய்து வைத்து ஐந்து ஆண்டுகளில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றுக் கொடுத்துவிட்டு நல்லசாமியின் மனைவி ஜன்னியில் இறந்துபோனது ஒன்று. செல்லப் பிள்ளையாய்த் தன் சொல்லைத் தட்டாதவனாக இருந்த செல்லச்சாமி - எப்படியோ குடிப்பழக்கத்துக்கு அளாகிப் போனது மற்றது.

நல்லசாமிக்கு இரண்டாம் கல்யாணம் செய்துவைக்க எல்லாருக்கும் ஆசை.ஆனால், 'போனவ பெத்த பொம்பளப்புள்ளய வாரவ எப்பிடி நடத்துவாளோ?' என்ற கவலை கல்யாண எண்ணத்தோடு ஆத்தாவின் மனதைப் பற்றிக்கொண்டது. மூன்று பிள்ளைகளிடமும் இதுபற்றிப் பலமுறை பேசிவிட்டார். கண்ணுச்சாமியும் செல்லசாமியும் சொன்ன யோசனை அவருக்குப் பிடித்துவிட்டது.

'அண்ணனுக்கு ரெண்டாங் கலியாணம் செய்யறதுக்கு முன்னால, தாயில்லாப் புள்ளக்கிப் பாதுகாப்பா கொஞ்ச நெலத்த எழுதி வெச்சரோனும்' என்பதுதான் அவர்களுடைய யோசனை. நல்லசாமியிடம் சொல்லாமலே அப்படிச் செய்துவிட வேண்டுமென்றும் அவர்கள் சொன்னார்கள். கவலையிலும் கன்னியம்மாளுக்குச் சந்தோசம். அப்படியே ஐந்து ஏக்கர் புஞ்சையை அந்தப் பெண்பிள்ளையின் பெயரில் உயில் எழுதி வைத்துவிட்டார்.

நல்லசாமிக்கு இரண்டாம் பெண் பார்ப்பதில் பெரிய சிரமம் ஏற்படவில்லை. கவுரமான குடும்பத்திலிருந்தே பெண் கிடைத்தது. எளிய முறையில் நல்லசாமியை பொன்னம்மாள் கைப்பிடித்தாள்.

ஆத்தாவுக்கு இப்போது மறுபடியும் ஒரு கவலை பெரிய அளவில் வந்துவிட்டது. பொன்னம்மாள் மற்ற இரண்டு மருமகள்களையும் போலல்லாமல் அடிக்கடி தாய் வீட்டுக்குப் போகத் தொடங்கி விட்டாள். நல்லசாமியும் அவ்வப்போது அவளைப் பார்க்கப் போகத் தொடங்கி, அவளுடனேயே தங்கியிருக்கும் நிலைக்கு வந்து விட்டான். நல்லசாமியின் இந்தப் போக்கும், செல்லச்சாமியின் குடிப்பழக்கமும், கஷ்டப்பட்டுத் தனியாகப் பண்ணையத்தைப் பார்த்து கொண்டிருக்கும் கண்ணுச்சாமியின் நிலைமையும் ஆத்தாவை யோசிக்க வைத்து விட்டன.

ஒரு முடிவுக்கு வந்த ஆத்தாள் ஊரில் தனக்கு வேண்டிய மூன்று பெரிய மனிதர்களைக் கூப்பிட்டுச் சொத்தை மகன்களுக்குப் பங்கு வைக்கச் சொல்லி விட்டாள். ஊரை ஒட்டிய தோட்டப் பங்கைச் செல்லசாமி எடுத்துக்கொண்டான். கிணற்றில் தண்ணீர் குறைவாக இருப்பதால் இரண்டு ஏக்கர் அதிகமாக விடப்பட்ட 'சின்ன நிலம்' பங்கை நல்லாமி எடுத்துக்கொண்டான். மூன்றாவது பங்கு கண்ணுச்சாமிக்குக் கிடைத்தது. தாயற்ற பேத்திக்கு எழுதி வைத்த புஞ்சை நிலத்தையும் கொடுக்காமல் வாங்கலில் இருந்த சில ஆயிரம் ரூபாய்களையும் தன்வசம் வைத்துக்கொண்டு,தனிப் பண்ணையம் வைக்கப் போகும் மூன்று மகன்களுக்கும் கொஞ்சம் பணத்தையும் கொடுத்து உதவினார் ஆத்தாள்.

குடும்பம் பிரிந்து போனாலும் மூன்று மகன்களும் எப்போதும் போலப் போகவந்து ஒற்றுமையாக இருந்தது ஆத்தாவுக்கு சந்தோசத்தையே கொடுத்தது.

'நம்ம குடும்பம் மூணாச் செழிக்க போகுதுங்க ஆத்தா', என்று ஜோசியன் வேலுச்சாமி சொன்னபோது, அவனுக்கு இரண்டு ரூபாயைக் கொடுத்து, 'உன்வாக்குப் பலிக்கும்டா' என்று சொல்லிக்கொண்டே கண்களில் தேங்கிய ஆனந்தக்கண்ணீரைத் துடைத்துக்கொண்டார் ஆத்தாள்.

“நாங்க பங்கா கேட்டம்? எங்கள ஏ இப்படித் தொரத்தீட்டிங்க?” மூன்று மருமகள்களும் கண்களைத் துடைத்துக்கொண்டே கேட்டபோது ஆத்தாவால் அந்த நிமிசம் பதில் சொல்ல முடியவில்லை.

சொத்தைப் பிரித்துப் பங்கு வைத்ததில் ஆத்தாவுக்குப் பெரிய வருத்தமில்லை. தன் ஏழு பேரக் குழந்தைகளையும் பிரித்துக்கொடுக்க வேண்டி வந்துவிட்ட போதுதான் மிகவும் நொந்துபோனார்.

“ஏம்மா இப்பிடிக் கவலப் படற? வட்டிப் பணத்தில் தெனோம் எட்டணாவ ஒவ்வொருத்துருக்கும் குடுத்துப்பாரு! 'ஏழு பேரும் உம்புள்ளைகளா எங்க பிள்ளைகளா'ன்னு தெரிஞ்சு போகும்!” ஒன்றுசேர மூன்று மகன்களும் சொன்னபோது ஆத்தாள் சிரித்து விட்டார்.

“அரயுங் காலுமா வரப்போற அந்த வரும்படியயிம் அன்னன்னிக்கே பங்கு பிரிக்கச் சொல்றீகளாடா பாவிப் பசக!” செல்லமாகச் சொன்ன ஆத்தாளை மகன்கள் மகிழ்ச்சியில் தழுவிக்கொண்டார்கள்.

கொஞ்ச நாட்களில் ஆத்தாவுக்குப் பழகிப் போய் விட்டது. ஐந்தாறு ரூபாய்கள் ஒரு நாளைக்கு வட்டி வந்து சேரும். காலணாவும் அரையணாவுமாகப் பேரக் குழந்தைகளுக்கு வந்தபோதெல்லாம் கொடுத்து, 'நல்லாப் படீங்கடா கண்ணுக', என்று உச்சி முகர்ந்து அரவணைத்துக் கொண்டிருந்தார்.

'அஞ்சு குடு, பத்துக் குடு', என்று செல்லச்சாமியும் அவ்வப்போது வந்து ஆத்தாவிடம் பணம் வாங்கிப் போவான். சில நேரங்களில் ஆத்தாள் காசு போட்டு வைத்திருக்கும் அரிசிப் பானையைத் தூக்கிவந்து அவள் முன்னால் உட்கார்ந்து அதில் போட்டிருக்கும் காசுகளை எண்ணிக் கொடுத்துவிட்டு, சிரித்துக்கொண்டே கூலி கேட்பான்.

எப்போதாவது கண்ணுச்சாமியும் வந்து ஆத்தாவைச் சீண்டுவான். 'என்னமோ சொல்லும்மா உங்காசில பீடி வாங்கிகுடிச்சா அது தனிச் சொகந்தாம்மா!" என்பான்.

நல்லசாமியும் இளைத்தவனாயில்லை இந்த விசயத்தில்! ஆனால் பணம் கேட்காமல் கொக்கிப்போட்டுப் பேசுவான். 'பேத்தி பூமிய ஒட்ற அவுளுக்கு நீதா நக நட்டுப் போடோனும். சேத்தி வய்யிம்மா'. நினைவூட்டுவான்.

"எனக்கு ஏழு குட்டீகடா. எல்லாமே ஒண்ணுதாண்டா''.

எந்த மகன் வரும்போதும் தன் பேரக் குழந்தைகளைக் கூட்டி வரச் சொல்லி, தான் இன்னும் 'குடும்பத் தலைவிதான்' என்று அவர் நிலைநாட்டிக் கொள்வார்.

- தொடரும் ....

❖❖❖❖❖

## அமராவதி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம்

**அறிக்கை**

பாம்பாறு அமராவதியிலிருந்து கேரளத்துக்கு 3 டி.எம்.சி! மேல் பவானியிலிருந்து கேரளத்துக்கு 6 டிஎம்சி! அமராவதிப் படுகையில் 3000 ஏக்கர் கரும்பு பயிரிடாதே! இரு போகம் ஒரு போகமாகும் அபாயம் ! கூட்டுக் குடிநீர்த்திட்டம்-சர்க்கரை ஆலையின் எதிர்கால நிலை கேள்விக்குறி! மூணாறு என்னும் பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு பாம்பாறு என்னும் கோவணம் பறி போயிற்று !

- ❖ அமராவதி புதிய கால்வாய் பாசன நிலங்களை பி.ஏ.பி.யுடன் இணைத்து 5வது மண்டலமாக மாற்று.
- ❖ அமராவதி அணைக்கு உள்ளே நீர்ப் பிடிப்புப் பகுதி தரிசு நிலங்களை, நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்துக்கொடு.
- ❖ அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் இயந்திர சாமான்கள் பேரீச்சம் பழத்துக்கு விலை போகும் அபாயம் !

**மறு பரிசீலினையா ? மறு வழக்கா ?**
**இனி என்ன செய்ய வேண்டும் ?**

அன்பார்ந்த அமராவதி விவசாயப் பெருமக்களே !
பொதுமக்களே ! வணக்கம்,

அமராவதி அணையும், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையும் கட்டப்பட்டு 50 வருடங்கள் ஆகி விட்டன. கர்ம வீரர் காமராசருக்கும், காவிரி நடுவர் மன்றம் அமைத்திட்ட வி.பி.சிங் அவர்களுக்கும் தலை வணங்குகிறோம்.

16 ஆண்டுகளுக்கு முன்னர், 15-4-1991 அன்று, அமராவதி அணைக்கு வருகை தந்த காவிரி நடுவர் மன்ற மூன்று நீதிபதிகளுக்கும், நமது சங்கத்தின் சார்பில் ப.செல்லமுத்து (ஊட்டி), ப.அருணாசலம், எம்.திருமூர்த்தி (CPI), மறைந்த தோழர்கள் மு.லிங்கசாமி (CPI) மற்றும் எம்.தங்கவேல் (CPI-M) ஆகிய ஐந்து பேர் மட்டும் மாலை அணிவித்து ஒரு மகஜரைச் சமர்ப்பித்தோம்.

அதில், காவிரி–அமராவதி நதி நீர்ப் பிரச்சனையை, தொலை நோக்கக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, அதற்கான தீர்வையும் குறிப்பிட்டிருந்தோம். பத்திரிக்கை விளம்பரத்திற்காக நாங்கள் ‘பகல் வேடம்’ தரிக்கவில்லை. அமராவதியில் பற்றாக்குறை இருப்பதால், காவிரி ‘டெல்டா’ விவசாயிகளுக்கு உதவ இயலாது எனவும், மூணாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் எனவும், தென்னக நதிகளை மகாநதி - கோதாவரி, கிருஷ்ணா- காவிரி நதிகளை இணைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி இருந்தோம். மேலும்,

1. நீதிபதி பச்சாவட நடுவர் மன்றத் தீர்ப்பின் படி, கர்நாடகாவுக்கு 700 டிஎம்சி யும் மகாராட்டிரா மாநிலத்துக்கு 560 டிஎம்சி யும் ஒதுக்கப்பட்டன. ஆனால் கர்நாடகாவுக்கு ஒதுக்கப்பட்ட 700 டிஎம்சியில் வெறும் 360 டிம்சியை மட்டுமே அது பயன்படுத்த முடிந்தது. இந்த நிலையில், பற்றாக்குறை மாநிலமான தமிழ்நாட்டோடு, கர்நாடகம், ஏன் காவிரிப் பிரச்சனையில் நீலிக்கண்ணிர் வடிக்க வேண்டும்?
2. மத்திய நீர்வள மேம்பாட்டுத் திட்டக் குழுவின் 1978 ஆம் ஆண்டு அறிக்கை படி, கேரளாவின் 85 ஆறுகளில், அதன் தேவை போக, 1250 டி.எம்.சி. நீரானது, வீணாக அரபிக் கடலுக்கு செல்கிறது. இந்த நிலையில் தமிழ் நாட்டோடு ஏன் கேரளம் முரண்டு பிடிக்கிறது? என்று அன்றைக்கு சொல்லப்பட்ட எமது வாதங்கள், 16 ஆண்டுகள் கழிந்தாலும், இன்றும் உயிருள்ளதோடு, விவசாயிகளை எழுச்சி பெறச் செய்துள்ளது குறித்து எமக்குப் பெருமையே!

**பசிக்காதவர்களுக்குப் பணியாரம் எதற்கு ?**

அமராவதியிலிருந்து 3 டிஎம்சியும், பவானியிலிருந்து 6 டிஎம்சியும், தற்போது உபயோகிக்கும் சூழ்நிலையில் கேரளம் இல்லை என்றும், பிற்காலத்தில் எப்போது தேவைப்பட்டாலும், நாம் மறுக்காமல் தர வேண்டும் என்றும் தீர்ப்பு கூறுகிறது.

கேரளத்திலும், தமிழ்நாட்டிலும் உற்பத்தியாகி பெரும்பாலும், கர்நாடகாவில் ஓடும் கபினி ஆற்றுப் படுகையில் 126 டிஎம்சி நீர் கிடைக்கும் போது, கேரளம் தனக்கு ஒதுக்கப்பட்ட 30 டிஎம்சியை அங்கேயே இருந்து எடுக்காமல், எந்த உள்நோக்கத்தோடு பாம்பாற்றிலிருந்தும், பவானியிலிருந்தும் 9 டிஎம்சி யைக் கேட்கிறது?

**மூணாறு திட்டம் என்பது என்ன ?**

மறையூருக்கு மேலாக, ஆனைக்கால்பட்டி, லக்கம், காப்பி ஸ்டோர் பகுதிகளில், மேற்கு நோக்கிப் பாயும் மூணாற்றைத் தலையாறு என்ற இடத்தில் தடுத்து அணைகட்டி, கேரளா மின்சாரம் எடுத்த பின்பு, வீணாகும் தண்ணீரைத் தென்மலை என்ற இடத்தில் சுரங்கப் பாதை அமைத்து பாம்பாற்றில் இணைத்து அமராவதி அணைக்குக் கொண்டுவரும் உயர்ந்த திட்டமாகும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், ஆற்றின் இருபுறமும் உள்ள, கண்ணன் - தேவன் டீ எஸ்டேட்டுக்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கிவிடும் என்று கூறி எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

**நாம் இனி என்ன செய்ய வேண்டும் ?**

காவிரி நடுவர் மன்றம் மூன்று நீதிபதிகளைக் கொண்டது. சுப்ரீம் கோர்ட்டுக்குச் சமமானது. ஏகமனதான முடிவு என்பதால் சிக்கலில்லை. தன்னுடைய தீர்ப்புக்கு 5-2-2007 முதல் 4-5-2007 வரை, மூன்று மாத கால அவகாசம் கொடுத்துள்ளது. இதன் தீர்ப்புக்கு ‘அப்பீல்’ என்பது கிடையாது. வேண்டுமானால், நாம் மறுபரிசீலனை மனு போடலாம். அப்படிப் போட்டாலும் 3 மாத கெடு முடிந்த பின்பு தான் விசாரிக்கும். தற்போது ‘சுப்ரீம்கோர்ட்டை’ நாடினால் நடுவர் மன்றத்திற்கே போங்கள் என்று திருப்பி விடும். மூன்று மாத கால அவகாசம் முடிந்தவுடன், இதன் தீர்ப்பை, மத்திய அரசானது கெஜட்டில் அரசு ஆணையாக வெளியிடும். அதன் பின் நடைமுறைக்கு வரும். அதுவரை, 25-06-1991 ல் வெளியிடப்பட்ட நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின் படி 205 டி.எம்.சி. நமக்கு கிடைத்து வரும். குப்பையைக் கிளறி விடும் சில கோழிகள் சொல்வது போல், 3 மாத அவகாசம் முடிவதற்குள், நடுவர் மன்றத் தீர்ப்பை அப்படியே அரசு ஆணையாக அறிவிக்கச்சொல்லி மனு தாக்கல் செய்து விட்டால், பிறகு நாம் மறுபரிசீலனைக்கோ, அப்பீலுக்கோ போக முடியாது. மாட்டிக்கொள்வோம்.

ஆக, நமது சங்கமும், தமிழக அரசும், மூன்று மாத கால அவகாசம் முடியும் வரை, மிகப்பொறுமையாகவும், அமைதியாகவும் இருக்க வேண்டும். அதாவது 4.5.2007 வரை. பிறகு சுப்ரீம்கோர்ட்டில் (நடுவர் மன்றத்தில் அல்ல) நடுவர் மன்றத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை கோரியும், புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் எனவும், அல்லது 9 நீதிபதிகளைக் கொண்ட ஃபுல்பெஞ்ச்சில் விசாரிக்க வேண்டும் எனவும், தமிழக அரசு வழக்குத் தொடர வேண்டும். அதே வழக்கிலோ அல்லது தனியாகவோ அமராவதி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம், தனி வழக்கறிஞரை அமர்த்தி, வழக்கில் 'இம்பிளீட்' ஆகி வாதிட வேண்டும்.

புதிய நடுவர் மன்றம், இந்த வழக்கை ஒரு வருட காலத்துக்குள் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் விண்ணப்பிக்கலாம். இப்படிப் புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று கேட்பதற்கு முன் உதாரணம் உள்ளது. கிருஷ்ணாநதி நீர் தொடர்பாக, நடுவர் மன்றம் அளித்த இறுதித் தீர்ப்புக்குப் பின், அம்மன்றம் காலாவதியான பிறகு, உச்சநீதிமன்றத்தை அணுகி, புதிய நடுவர் மன்றம் பெற்றதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதற்கு அரசியல் அமைப்புச் சிட்டம் 131 வது பிரிவும், பல உச்சநீதி மன்றத் தீர்ப்புகளும் நமக்கு வழிவகுக்கின்றன.

பூனைக்கு யார் மணி கட்டுவது என்பது பழைய கதை. பூனையின் கழுத்தில் உள்ள மணியோசையைக் கேட்டவுடன், எல்லா எலிகளும் தப்பித்துக்கொள்வதற்காக மணி கட்டப்படவில்லை. எல்லா எலிகளும் பூனையின் மீது ஒரே மூச்சில் பாய வேண்டும் என்பதற்காகவே மணி கட்டப்பட்டுள்ளது.

கிராமங்கள் தோறும் அமராவதி பாதுகாப்புக் கமிட்டிகள் அமைத்து வழக்கு நிதி வசூலித்து வழக்கை எதிர்கொள்ளத் தயாராகுவீர். நாம் தொடுக்கும் வழக்கு முதல் அறிக்கையில் சொல்லப்பட்ட AMC யில் 6 மாத தண்ணீர் உட்பட சில கோரிக்கைகளை அமுல்படுத்த, தமிழக அரசுக்கு எதிரானதாகவும் இருக்கும்.

ஆகவே அமராவதி விவசாயிகள் அனைவரும், உறுதியான தலைமையின் கீழ் அணி வகுத்துச் செயல்படுவோம்.

ஒன்றுபடுவோம் ! வெற்றிபெறுவோம் !!

ப.செல்லமுத்து (ஊட்டி)

தலைவர், பெருமாள்புதூர் - 642 204

குறிப்பு : ஒரு டி.எம்.சி என்பது ஆயிரம் பெருக்கல் பத்து லட்சம் கன அடி. ஒரு கன அடி என்பது 28.32 லிட்டர் நீர்.

❖❖❖❖❖

# முதியோர் மருத்துவருடன் வெளிநாட்டு மாணவர்கள் சந்திப்பு



அமெரிக்காவிலுள்ள மிக்சிகன் பல்கலைக்கழகத்தில் படிக்கும் MBA மாணவர்கள் 25-03-2010 அன்று மாலை முதியோர் மருத்துவர் டாக்டர். வ.செ.நடராசன் அவர்களை அவருடைய கிளினிக்கில் சந்தித்து இந்திய பொருளாதாரத்தில் முதியோர்களின் பங்கு பற்றி சுமார் 3 மணி நேரம் கலந்து ஆலோசித்து உரையாடினார்கள். இதில் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளிலிருந்து வந்த மாணவர்கள் கலந்துகொண்டார்கள். இந்தச் சந்திப்பு தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக வெளிநாட்டு மாணவர்கள் கூறினார்கள்.

டாக்டர் வ.செ.நடராசன் அவர்களின் பெருமைமிகு மருத்துவ சேவை தொடர கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

## வருந்துகிறோம்



நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ‘அன்புக்குடில் சேவை மைய’ அமைப்பாளரும், கொங்குச் சமுதாய முன்னேற்றத்திற்கு அயராது உழைத்து வருபவருமான ஆசிரியர் தி.செ.பழனிவேலு அவர்களின் மனைவியும், கனராவங்கி துணைப் பொதுமேலாளர் ப.பன்னீர்செல்வம் அவர்களின் தாயாருமான ப.பெருமு அம்மையார் 15-07-2010 அன்று தனது 75 ஆவது வயதில் இயற்கை எய்தினார் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவினால் துயருற்றிருக்கும் ஆசிரியர் அவர்களுக்கும் மற்றும் அவரது குடும்பத்தார்க்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. அம்மையாரின் ஆன்மா சாந்தியடைய சங்கம் பிரார்த்திக்கிறது.

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், நாராயண பாளையம், மணக்காடு திரு. P.தங்கவேலு M.Sc., (தமிழ்நாடு அரசு இணைச்செயலாளர் (ஓய்வு), தலைமைச் செயலகம், சென்னை - 9)-திருமதி இரத்தினா அவர்களின் மகளும், சங்க உறுப்பினர் திரு. T.இராஜேஷ்குமார் (எண்.2318) அவர்களது தங்கையுமான செல்வி. T.மலர்விழி M.C.A., அவர்களுக்கும், இராசிபுரம் வட்டம் P.கல்லுபாளையம் கருப்பனார்கோயில் தோட்டம் , திரு. M.ரங்கசாமி - திருமதி சரசு அவர்களது மகன் செல்வன் R.அருள்கண்ணன் M.C.A., அவர்களுக்கும், 17-6-2010 அன்று ஆத்தூர் ரோடு, இராசிபுரம் கொங்கு வேளாளர் சமுதாயக் கூடத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளாக கொங்கு சொந்தங்களும் நண்பர்களும் மணமக்களை வாழ்த்தினர்.

புதுமணத் தம்பதியர் எல்லாவளமும் பெற்று மகிழ்வுடன் வாழ கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# இவை மக்கிப்போக ஆகும் காலங்கள் உங்களுக்குத் தெரியுமா ?

| | | |
|---|---|---|
| காகிதப் பை | : | 1 மாதம் |
| வாழைப்பழத் தோல் | : | 3 - 4 மாதங்கள் |
| பருத்தித் துணி | : | 5 மாதங்கள் |
| கம்பளி/கால் உறை | : | 1 ஆண்டு |
| தோல் காலணி | : | 40 ஆண்டுகள் |
| தகரக் குவளை | : | 50 ஆண்டுகள் |
| அலுமினியம் | : | 200 ஆண்டுகள் |
| பிளாஸ்டிக் | : | 10 லட்சம் ஆண்டுகள் |
| தெர்மாகோல் | : | அழிவே இல்லை |

மாசு தவிர்ப்போம் ! மண்வளம் காப்போம் !

செய்தி : டாக்டர் எஸ்.ராமசாமி, M.Sc., (Agiri) Ph.D.,


❖❖❖❖❖

# வேண்டும் வரம்...

மதம் பிடித்த மனங்கள் வேண்டாம்
சதம் அடிக்கும் கரங்கள் வேண்டும் !
வேற்றுமை ஊற்றெடுக்கும் உள்ளம் வேண்டாம்
ஒற்றுமை ஒளி ஏற்றுகின்ற உறவு வேண்டும் !

முள் விதைக்கும் சிந்தனை வேண்டாம்
முன்னேற்றக் கனவுகள் வேண்டும் !
பகைமை பூக்கும் வஞ்சம் வேண்டாம்
பாசம் பொழியும் நெஞ்சம் வேண்டும் !

மதியைத் தொலைத்த மனிதர்கள் வேண்டாம்
நதியை இணைக்க புனிதர்கள் வேண்டும்
விதியில் விழும் வீணர்கள் வேண்டாம்
விதியை வெல்லும் வீரர்கள் வேண்டும் !



பூக்களை எரிக்கும் வன்முறை வேண்டாம்
பூமியைக் காக்கும் நன்முறை வேண்டும் !
எரியும் தீயாய் உணர்வுகள் வேண்டாம்
எரியும் தீபமாய் உள்மனம் வேண்டும் !

பொதுநலம் தொலைத்த சுயநலம் வேண்டாம்
பொதுநல மூச்சென தலைமை வேண்டும் !
இதயம் வேகும் இழப்புகள் வேண்டாம்
இதயம் மகிழும் இணைப்புகள் வேண்டும் !

வஞ்சனை முளைக்கின்ற நெஞ்சம் வேண்டாம்
சிந்தனையில் குளித்தெழும் செயல்கள் வேண்டும் !
உரிமைதனைப் பறிக்கின்ற முயற்சிகள் வேண்டாம்
உண்மைதனை ஏற்றுகின்ற எழுச்சிகள் வேண்டும் !

நாளைய விடியலில் நம்பிக்கை வைப்போம் !
சோலைகள் மலர நாற்றுக்கள் வைப்போம் !
கலகங்கள் மறைய உறவுகள் வளர்ப்போம் !
கவிதைகள் பிறக்க கற்பனை விரிப்போம் !

❖❖❖❖❖

முனைவர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன்,
தலைவர் - மனிதவள மேம்பாட்டுத்துறை
ரூட்ஸ் நிறுவனங்கள்
கணபதி, கோவை - 641 006

# பால் மறத்தல்

சென்ற இதழ் தொடர்ச்சி.... - தமிழறிஞர் பெ.தூரன்

குழந்தைக்குத் தாய்ப்பால் உண்பதில்தான் முதல் இன்ப உணர்ச்சி ஏற்படுகிறது. பாலின் சுவை, பசி தணிக்கும் தன்மை முதலியவற்றால் மட்டுமல்லாது, உண்ணுங்காலத்தில் குழந்தையின் வாயிலும் ஒருவித இன்பம் பிறக்கிறது. அதைக் குழந்தை நன்கு அனுபவிப்பதால் கொடுப்பதை அறவே நிறுத்தும் போது அதற்கு ஏக்கம் உண்டாகிறது.

சாதாரணமாகக் குழந்தைக்கு ஒன்பது அல்லது பத்துமாதம் ஆகின்ற காலத்தில் பால் கொடுப்பதை நிறுத்திவிடலாம். அவ்வாறு செய்யும்போது குழந்தைக்கு அதுவரையில் கிடைத்த இன்ப உணர்ச்சி தடைபடுவதால் அதன் உள்ளத்தில் பல கோளாறுகள் உண்டாகச் சந்தர்ப்பம் நேரிடுகிறது. பால் மறக்கச் செய்வதை நயமாக முன் எச்சரிக்கையுடன் செய்தால் இக்கோளாறுகள் வராமல் தடுக்கமுடியும்.

குழந்தை பிறந்ததிலிருந்தே இதற்கு அடிகோல வேண்டும். தாய் பால் கொடுக்கிறாள். குழந்தைக்காகப் பலவிதப் பணிகள் செய்கிறாள். அதனிடம்அன்போடு பேசுகிறாள். அதன் சுகத்திற்காக எவ்வளவோ சிரமப்படுகிறாள், இவற்றால் இயற்கையாகவே குழந்தைக்குத் தாயிடம் அன்பு ஏற்படுகிறது. இவ்வாறில்லாமல் பால் உண்பதில் மட்டும் குழந்தை தாயிடம் இன்பம் காணுமாயின், அதன் அன்பு அவள் மார்போடு நின்றுவிடுகிறது. குழந்தைக்குத் தாயிடம் பரந்த அன்பு ஏற்படச் செய்யவேண்டும். பூங்குழந்தை மிகவும் சுயநலம் கொண்டது என்று முன்பே சொன்னோம். அது தனக்கு இன்பம் கொடுப்பதைத்தான் விரும்பும்.

பிறகு இந்த அன்பு தானாகவே மற்றவர்களிடமும் செல்ல ஆரம்பிக்கும்.

பால் மறக்கச் செய்வதற்கு அடிகோலுவதில் இது முதற்படி. ஆரம்பத்திலிருந்து குழந்தையின் தேகபோஷணைக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட காலங்களில் பால் கொடுத்துவரவேண்டும். இப்படிச் செய்வதால் ஜீரணம் சரியாக ஆவதோடு குழந்தையின் மனவளர்ச்சிக்கும் இது உதவியாக இருக்கிறது. இடைவேளையில் ஒரு சமயம் குழந்தை பால் உண்ண விரும்பினால், சர்க்கரை கலந்த ஜலம் கொஞ்சம் கொடுக்கலாம்.

ஐந்து அல்லது ஆறாவது மாதத்தில் பால் கொடுப்பதை ஒரு தடவை குறைத்துக்கொண்டு பசும் பாலை அதற்குப் பதிலாகஅதிகப்படுத்தலாம். இப்படியே குறைத்துக்கொண்டு வந்து ஒன்பது அல்லது பத்தாவது மாதத்தில் முற்றும் நிறுத்திவிடலாம்.அதற்குமேல் தாய்ப்பால் தேவையில்லை. எட்டு, ஒன்பதாவது மாதத்திலேயே பாலன்னம் போன்ற குழந்தைக்குப் பிடிக்கும் லேசான உணவையும் சிறிய அளவில் கொடுத்துவரலாம்.

ஒன்பது அல்லது பத்தாவது மாதத்தில் பூரணமாகப் பால் கொடுப்பதை நிறுத்துமுன், சிறிது காலத்திற்குத் தினம் ஒரு தடவை மட்டும் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். அதுவும் இரவு குழந்தை தூங்கப் போவதற்குச் சற்று முன்பாக இருப்பது நல்லது. அப்பொழுது அதை நிறுத்துவது எளிதாக இருக்கும்.

அதை நிறுத்தும்போது அதற்குப் பதிலாகப் பசும்பால் கொடுத்துவிட்டால் குழந்தைக்கு இரவில் பசி தோன்றாது. பாலோடையில் கொடுப்பதைவிடக் கெண்டியிலோ கண்ணாடிப் புட்டியிலே ரப்பரால் செய்த பால் குடிக்கும் கருவியை இட்டுக் கொடுப்பது நல்லது. குழந்தை மகிழ்ச்சியோடு உட்கொள்ளுமாறு அன்பு காட்டவேண்டும்.

சாதரணமாகக் குழந்தை உதட்டில் பெறுகிற இன்பத்தைப் பாலுண்ணாதபோதும் விரலைச் சுவைத்து அடைய முயல்கிறது. இம்மாதிரி செய்கை முன்பே காணப்பட்டாலும் பால் நிறுத்தப்பட்டவுடன் சிறிது அதிகமாகலாம். இந்தப் பழக்கத்தை வற்புறுத்தியோ பயமுறுத்தியோ தடுக்கக்கூடாது. அவ்வாறு செய்வதால் குழந்தை இன்ப உணர்ச்சியை நாடித் தனது குறியில் கைவைத்துப் பழகுகிறது.

ஆதலால் விரல் சுவைப்பதை நயமாக மாற்ற வேண்டும் அதனால் கிடைக்கும் இன்பம் குழந்தைக்கு வேறு வழிகளில் கிடைக்கும்படி நாம்செய்ய வேண்டும். பழம் கொடுப்பது, மிட்டாய் கொடுப்பது, அதற்குப் பிடித்த உணவைக்கொடுப்பது, புதிய புதிய விளையாட்டுக் கருவிகள் தருவது, விளையாட்டுகள் காட்டுவது இந்த மாதிரியாகக் குழந்தைக்கு இன்பங்காணப் புது வழிகளைச் செய்யவேண்டும். அப்பொழுது சுலபமாக விரல் சுவைப்பது நின்றுவிடும்.

தாயிடமிருந்து இப்போது குழந்தை பல விதத்திலும் அன்பைப் பெறவேண்டும்.

அப்படிச் செய்தால் குழந்தைக்குப் பால் மறக்கும் போது உண்டாகிற ஏக்கமும் உள்ளக் கோளாறுகளும் ஏற்படாமல் செய்து விடலாம்.

இது சம்பந்தமாகப் பெற்றோர்கள் இன்னும் சில விஷயங்களையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உறங்கும் போது குழந்தையைப் பக்கத்திலேயே படுக்க வைத்துக்கொள்ள கூடாது. இது ஆரோக்கியத்திற்குக் கெட்டது. மன வளர்ச்சிக்கும் ஏற்றதல்ல.

பத்து மாதத்திற்குமேல் தாய்ப்பால் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு அவசியமில்லை. அதற்கு மேல் கொடுத்துக்கொண்டிருந்தால் அதை மறக்கச் செய்வதும் சிரமமாகிறது.

சில குழந்தைகள் வெளித்தோற்றத்திற்கு ஏக்கங் கொண்டனவாகக் காணப்படாவிட்டாலும் அவற்றின் உள்ளத்தில் பலவகையான கோளாறுகள் ஏற்பட்டிருக்கலாம்.

பிறந்ததிலிருந்து பெற்ற ஓர் இன்ப உணர்ச்சி கிடைக்காததால் குழந்தை ஏமாற்றமடைகிறது. அந்த ஏமாற்றம் மறைவுள்ளத்தில் பதிந்து பிற்காலத்தில் வெவ்வேறு விதமான விரும்பத்தகாத ஆசைகளுக்குக் காரணமாகலாம். ஆதலால்தான் பால் மறக்கச் செய்யும்போது வேறு வழிகளில் இன்பம் பெறச் செய்யவேண்டும்.

விரலைச் சுவைப்பது அதிகம் நீடித்தால் முளைக்கும்போதே பல் வரிசை கெட்டுப்போகலாம்.நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து இந்தப் பழக்கம் வருவதிலிருந்தே குழந்தை பால் குடிப்பதால் பெற்ற இன்பம் தவிர வேறு இன்பங்களைப் பெறவில்லை என்பது தெளிவாகும்.

அதை அறிந்து குழந்தைக்குப் புதிய புதிய இன்பங்காண உதவவேண்டும். மணலில் வீடு கட்டுவது, களி மண்ணால் பல்வேறு உருவங்கள் செய்வது முதலியனவும் குழந்தைக்குப் பெரிதும் இன்பங்கொடுக்கும். இவற்றையெல்லாம் விடப் பெற்றோரின் அன்பே இக்காலத்தில் மிக முக்கியம்.

- தொடரும் ....

❖❖❖❖❖

# வானம் தொடலாம் வாங்க

சென்ற இதழ் தொடர்ச்சி.... - முனைவர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

**தன்னம்பிக்கைக்கும் தலைக்கனத்திற்கும் என்ன வித்தியாசம் ?**

முடியாது என்பது மூடத்தனம்
முடியுமா? என்பது அவநம்பிக்கை
முடியும் என்பது தன்னம்பிக்கை
என்னால் மட்டுமே முடியும் என்பது தலைக்கனம்

என்னாலும் முடியும்; உங்களாலும் முடியும்; நானும் நல்லவன், நீங்களும் நல்லவர் என்ற மனநிலையோடு மற்றவர்களை அணுகக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் நமது மனம் பண்படும்.

தனக்குத்தான் எல்லாம் தெரியும், மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்ற அகந்தையோடு பிறருடன் பழகுபவர்கள் வாழ்க்கையில் நிலையான வெற்றியைப் பெற முடியாது. பண்பும் பணிவும் உள்ளவர்களே நல்லவர்களாக உயர்ந்து மக்களின் மனங்களில் நிலையான இடத்தைப் பெற முடியும்.

திறமையாக இருக்கும்போது பணிவாக இருக்கவும், செல்வத்தோடு இருக்கும்போது எளிமையாக இருக்கவும், பதவியில் இருக்கும்போது பரிவோடு இருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய பண்புகளே ஒருவரை வெற்றிச் சிகரத்தில் தக்க வைக்கும்.

**'அதை அப்படிச் செய்! இதை இப்படிச் செய்' எனப் பெற்றோர்கள் சொல்லும்போது எனக்குக் கொஞ்சம் கோபமாக வருகிறது.**

ஒரு சிற்பி ஓர்அழகான சிலையைச் செதுக்கினார். அனைவரும் அச்சிலையை ரசித்துப் பார்த்துவிட்டு, அந்தச் சிற்பியைப் பெரிதும் பாராட்டினார்கள். அப்பாராட்டு மொழிகளைக் கேட்ட சிற்பி சொன்னார். "நான் ஒன்றும்பெரிதாக சாதித்து விடவில்லை. ஒரு பெரிய கல்லை எடுத்து, சிறிய உளி மூலமாக, அக்கல்லில் உள்ள வேண்டாத பாகங்களை நீக்கிவிட்டேன். இந்த அழகிய சிலை உருவாகி விட்டது அவ்வளவுதான் என்றார். ஆம் ! வேண்டாத பாகங்களை நீக்கினால்தான் ஒரு கல் அழகிய சிலையாக மாறுகின்றது.

அதுபோலதான் நம்மிடமுள்ள வேண்டாத எண்ணங்களை, செயல்களை, பழக்க வழக்கங்களை நீக்கினால்தான் நாம் ஒரு நல்ல மனிதராக உயர முடியும்.

அதற்காகத்தான், நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் செம்மையாக இருக்க வேண்டும். உங்களுடைய ஒவ்வொரு பழக்கமும் சிறந்ததாக அமைய வேண்டும் என்பதற்காக இதுபோன்ற அறிவுரைகளைத் தருகின்றார்கள். அறிவுரைகள் அன்று கசக்கும். எண்ணிப் பார்த்த பின்பு ஆயுள் முழுமைக்கும் இனிக்கும்.

**எத்தகைய கல்விமுறை வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் ?**

கல்வியை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. தேர்விற்கான கல்வி (Education for Examination) 2. வேலைக்கான கல்வி (Education for Employment) 3. வாழ்க்கைக்கான கல்வி (Education for Life). ஆனால், தற்போது உள்ள கல்விமுறை முதல் இரண்டு வகையைச் சார்ந்ததாகவே இருக்கின்றது. அதனால்தான் படித்தவர்கள் கூடி வாழத் தெரியாமல், பல்வேறு சிக்கல்களில் சிக்கி வேதனையில் மூழ்கிப் போய் விடுகின்றார்கள். அத்தோடு படித்தவர்களை வல்லவர்களாக்குகின்ற கல்வி, அவர்களை நல்லவர்களாக்கத் தவறி விடுவதையும் நடைமுறை வாழ்க்கையில் உணர முடிகின்றது.

ஆகவே, நமக்குத் தேவை திறமைகளையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் கற்றுத் தருகின்ற வாழ்க்கைக் கல்விதான். அதாவது கல்வியின் மூலம், மூளை மட்டும் வளர்ந்தால் போதாது, மனமும் பண்பட வேண்டும். அப்பொழுதுதான் மனித நேயமிக்க மனிதர்களை உருவாக்க முடியும்.

நான் சமீபத்தில் பி.சரண்யா என்ற மாணவி எழுதிய கவிதையைப் படித்தேன். அதை நீங்களும் படியுங்கள். தற்போதுள்ள கல்வியின் தன்மை புரியும்.

அப்பா சொன்னார் டாக்டர் ஆகணும் !
அம்மா சொன்னார் எஞ்சீனியர் ஆகணும் !
அண்ணன் சொன்னான் விஞ்ஞானி ஆகணும் !
அக்கா சொன்னார் கலெக்டர் ஆகணும் !
யாருமே சொல்லவில்லை நான் மனுஷி ஆகவேண்டுமென்று !

**ஒரு நல்ல முன்மாதிரி மனிதரை (Role Model) எவ்வாறு தேர்வு செய்வது ?**

இன்றைய நவநாகரிக உலகில் குறிப்பிட்ட ஒருவரை முன்மாதிரி மனிதராகத் தேர்வு செய்வது சற்றுக்கடினம். என்றாலும் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு உயர்ந்த பண்பு இருக்கும். அத்தகைய உயர்ந்த பண்புகளை அவர்களிடம் கற்றுக்கொள்வதோடு, அந்த விஷயத்தில் அவர்களை முன்மாதிரியாகவும் வைத்துக்கொள்ளலாம்.

அவ்வாறு நல்ல பண்புகளை, உங்களுடைய ஆசிரியர்கள், பெற்றோர்கள், உறவினர்கள், உடன் பிறந்தவர்களிடமிருந்தும், சந்திக்கின்ற பெரியவர்களிடமிருந்தும் கற்றுக்கொண்டு, உங்களை நீங்களே உயர்த்திக்கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்வதில் ஒருவர் சிறந்து விளங்குவார், பிறருக்கு உதவுவதில் இன்னொருவர் முன்மாதிரியாக இருப்பார், கடினமாக உழைப்பதில் மற்றொருவர் முன்மாதிரியாக இருப்பார். பிறருடன் பழகுவதில் இன்னொருவர் முன்மாதிரியாக இருப்பார். ஆகவே ஒவ்வொரு பண்பிற்கும், செயலுக்கும் அதில் சிறந்தவர்களை முன்மாதிரியாகக் கொண்டு, நாமும் அந்த அளவிற்கு உயரவேண்டும் என்ற எண்ணத்தோடு முயலுங்கள். உயர்வீர்கள்.

**அதிகாலையில் எழுந்தால்தான் முன்னேற முடியுமா ?**

சாதனையாளர்களிடம் பொதுவாக உள்ள குணங்களில் முதலாவதாக இருப்பது நேரத்தைச் சரியாக உழைப்பில் முதலீடு செய்வதுதான்.

நேரத்தை வீணாக்குவது என்பது வாழ்க்கையை வீணாக்குவதாகும். ஏனென்றால் வாழ்க்கை என்பது மணித்துளிகளின் தொகுப்பு. ஆகவே எட்டு மணி நேரத்திற்கு அதிகமாகத் தூங்கினால் நமது நேரம் விரயமாகிறது. சோம்பல் நம்மை ஆட்சி செய்கிறது.

அத்தோடு, அதிகாலை நேரத்தில் மனம் தெளிவாகவும், சூழ்நிலை அமைதியாகவும் இருக்கும். அந்த நேரத்தில் படிக்கும் போது படிக்கும் கருத்துகள் எளிதாக மனதில் பதியும். ஆகவே அதிகாலை நேரத்தை வீணடிக்கக்கூடாது. சமீபத்தில் நான் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. கலியமூர்த்தி அவர்கள் பேசியதை இங்கு உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவர் கூறியதாவது :

மூன்று மணிக்கு எழுபவர் முனிவர்
நான்கு மணிக்கு எழுபவர் ஞானி
ஐந்து மணிக்கு எழுபவர் அறிஞன்
ஆறு மணிக்கு எழுபவர் மனிதன்
ஏழு மணிக்கு எழுபவர் எருமை

படுக்கையில் இருந்து எழுவதிலேயே ஜெயிக்க முடியாதவனால் வாழ்க்கையில் ஜெயிக்க முடியுமா?

- தொடரும் ....

❖❖❖❖❖

## கொங்கு திருமணமாலை

திருமணத்தகவல் மையம் சென்னை

**மணமகள் தேவை :–**

கூறை கூட்டம், வயது 32, படிப்பு, B.E., (EEE) உயரம், 6 அடி நல்ல சிகப்பு, சதயம் 1, ராகு கோது உண்டு, செவ்வாய் இல்லை, 1 தங்கை, அமெரிக்காவில் படிக்கிறார். பூர்வீகம் சேலம், பெங்களூர் விப்ரோ கம்பெனியில் மேனேஜர், தந்தை இல்லை, சேலத்தில் வழக்கறிஞராக இருந்தார். நல்ல படித்த உயரமான அழகான பெண் தேவை.

தொடர்புக்கு :–
டி.கே.சுப்ரமணியம்
60,மேகசின் சாலை, பட்ரோடு
பரங்கிமலை, சென்னை - 600 016.
தொ.பேசி : 044-22311411, 98403 64348

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | K.சிவகாமி |
| படிப்பு | : | M.Sc., Software Engineer |
| பிறந்த தேதி | : | 02-08-1980 |
| நிறம் / உயரம் | : | சிகப்பு, 5'3'' |
| குலம் | : | பெருங்குடி, வாங்கல் கரூர் |
| வேலை | : | சாப்ட்வேர் என்ஜினியர் (பெங்களூர்) |
| பூர்வீகம் | : | நாமக்கல் |
| தற்போது வசிக்கும் இடம் | : | பீளமேடு, கோயமுத்தூர் |

அசுவினி - 1 பாதம்
12 ல் செவ்வாய், சனி
போன் : 0422-2570431, 9843558487

❖❖❖❖❖

# இன்றைய விவசாயின் நிலை என்ன? ஒரு அலசல்

- கே.கே.சோமசுந்தரம் I.F.S.
முன்னாள் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்

இன்றைய நிலையில் விவசாயம் ஒரு கேள்விக்குறியாகத் தான் உள்ளது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. மிக முக்கியமானது ஆள் பிரச்சினை, இப்பிரச்சினை திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல் ஆகிய தொழில் நகரங்களில் அதிகமாகவும் ஏனைய இடங்களில் சிறிது குறைவாகவும் உள்ளது. எப்படி இருப்பினும் ஆள் பிரச்சினை பூதாகாரமாக வடிவெடுத்து வருகிறது. பண்ணைகளில் வேலை செய்தவர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகள் பற்பல மாற்றுத் தொழிலுக்கு சென்றுவிட்டனர். அரசின் பல திட்டங்களில் குறிப்பாக 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பெரும்பாலான கிராமங்களில் குறிப்பாக பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இவர்கள் எல்லாம் இதுவரை விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் தான். அடுத்த பிரச்சினை மின்சாரம். சப்ளை தாறுமாறாக எப்பொழுது வரும் எப்பொழுது போகும் எனச் சொல்ல முடியாது. பல இடங்களில் பருவமழையும் எதிர்பார்த்த அளவு பெய்வதில்லை. அல்லது பருவம் மாறி பெய்கிறது. வருடாவருடம் வெப்பமும் அதிகமாகி வருகிறது. வாய்க்கால் பாசனம் உள்ள பகுதிகள் தவிர, ஏனைய இடங்களில் பெரும்பாலும் கிணற்றை நம்ப முடியாத நிலை. பல இடங்களில் போர்களும் வற்றிவிட்டன. கோவை, ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் சில போர்கள் 1000 அடியையும் தாண்டிவிட்டன. விவசாயிகளின் வாரிசுகளும் விவசாயத்தில் நம்பிக்கை இழந்து பல தொழிலுக்கும், வேலைக்கு நகரங்களுக்கும் சென்றுவிட்டனர். மஞ்சள், கருணைக்கிழங்கு, குச்சிக்கிழங்கு ஆகிய விளைபொருள்கள், வேறு சில விவசாயப்பொருள்கள் ஆகியவற்றின் விலை தற்போது திருப்தியாக இருந்தாலும், பெரும்பாலான விளைபொருள்களுக்கு நாம் வியாபாரிகளையும் இடைத்தரகர்களையுமே நம்ப வேண்டியுள்ளது. மேலும் இந்த விலை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்று, யாரும் சொல்ல முடியாது அதேசமயம் இப்பொருள்களின் விலையேற்றம், விவசாயத் தொழிலாளிகளிடையே சலனத்தை ஏற்படுத்தி கூலி ஏற்றம் நிகழ்ந்துவிட்டது. இனிமேல் இக்கூலி ஒருபோதும் இறங்காது.

❖❖❖❖❖

## மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | : A.N.சரவணன் B.E., |
| தந்தை | : A.K.நடராஜன் |
| தாய் | : திலகவதி |
| பிறந்த தேதி | : 13-09-1981, ஞாயிறு |
| பிறந்த நேரம் | : 2.54 a.m. (IST) |
| குலம் | : சாத்தந்தை |
| ஊர் | : சத்தியமங்கலம் |
| உடன் பிறந்தோர் | : **2** சகோதரிகள், திருமணமாகிவிட்டது**.** |
| நட்சத்திரம், ராசி | : சதயம் பாதம் **2**, கும்பம் |
| வேலை | : Asst. Manager - Computer Centre, (SAP) KSB Pump Ltd., Coimbatore |
| உயரம், நிறம் | : 168 cm சிவப்பு |
| எதிர்பாப்பு | : படித்த, குடும்பப் பாங்கான பெண் தேவை |

தொடர்பு : 04285 - 251386, 9976569387

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | : R.கிருத்திகா |
| பிறந்த ஊர் | : 04-05-1979, வயது **31** |
| ஊர் | : சான்றோர் பாளையம், மூலனூர், ஈரோடு Dt. |
| குலம் | : பூசம் |
| பெற்றோர் | : M.ரத்தினசாமி, - R.புஷ்பள்ளி |
| உடன் பிறப்பு | : ஒரு சகோதரி, திருமணமானவர் |
| கல்வி | : MBA., MA (Finance) in UK |
| வேலை | : UK ல் உள்ள ஒரு இன்சூரன்ஸ் கம்பெனி |
| குறிப்பு | : திருமணமாகி உடனே பிரிந்து பின் விவாகரத்துப் பெற்றவர்**.** பின் மேற்படிப்பு முடித்து தற்போது வேலையில் இருப்பவர்**.** உள்நாட்டிலோ **(**அ**)** வெளி நாட்டிலோ வேலையில் உள்ள, மறுமணத்திற்கு முழு விருப்பமுள்ள வரன் தேவை |

தொடர்பு : 0420-2227561, 9952580664, 9787587280

❖❖❖❖❖


# இதர உபதொழில்களின் திருப்தியற்ற நிலை

விவசாயத்தால் நட்டம் ஏற்பட்டாலும் விவாசயம் சார்ந்த பல உபதொழில்கள் இதுகாரும் விவசாயிக்கு கை கொடுத்த வந்துள்ளன. ஆனால் தற்போது ஆள் பற்றாக்குறையினால் பட்டுப்பூச்சி வளர்த்தல், சிறு கோழிப்பண்ணை பராமரிப்பு ஆகியவகைளயைம் தொடர்ர முடியாத நிலையில் உள்ளனர். கறவை மாடுகள் எப்பொழுதும் விவசாயிக்கு கை கொடுத்துத் தான் வந்துள்ளன. வாராவாரம் பாலிற்கு சொஸைட்டியில் பணம் வாங்கிக் கொள்கிறார்கள். சிறு குடும்பச்சிலவு ஆட்கூலி, செலவிற்கு ஓரளவிற்கு உதவி வந்தன. ஆனால் தற்போது தவிடு, புண்ணாக்கு தீவனம் ஆகியவற்றின் அபரிமிதமான விலை உயர்வால் மாடுகளையும், எருமைகளையும் குறைத்து வருகின்றனர். தீவனம் ஏறிய அளவிற்கு பால் விலை ஏறவில்லை.

கட்டுபடியாகத விலையாகத்தான் உள்ளது. கடைகளிலோ (அல்லது) ஆவின் பால் பூத்துகளிலோ நாம்பால் வாங்கும்போது லிட்டர் 24/ க்கு வாங்கவேண்டியுள்ளது. அதேசமயம் விவசாயின் பாலை ரூ. 14, க்குதான் சொஸைட்டிகளில் வாங்கிக்கொள்கின்றனர். (மாட்டுப்பால்) இடையில் இருக்கும் ரூ. 10 எங்கே போயிற்று, குறைந்த அளவு, பால் ஒரு லிட்டர் ரூ. 20 க்கு விற்றால்தான் கட்டுபடியாகும். சிறிது சிறிதாக பால் உற்பத்தியும், தொழிலும் நசிந்து வருகிறது. ஆடு வளர்ப்பு ஒரு லாபகரமான தொழில்தான். ஆனால் அரசு மேய்ச்சல் தரைகள் காணாமல் போய்விட்டன. 50 [illegible] 2000 [illegible] தீவன வசதி இல்லை. மற்றபடி இங்கும் ஆள் பற்றாக்குறை, ஆடுமேய்க்க ஆட்களே இல்லை. ஆகவே இதை தொழிலாகச் செய்ய முடியாது. 40,50 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கை விவசாயம் செழித்திருந்தது. காரணம் மண்வளம் அதிகமாக இருந்தது, தற்போது ஆடு, மாடுகள் இல்லை சாணம் இல்லை, இயற்கை விவசாயம் குறைந்து, ரசாயன உரங்களை திருப்பித்திருப்பி இட்டு பூமி மலடாகிவிட்டது. பூமியில் மண்புழு மற்றும் பூச்சி புழுக்கள் மடிந்துவிட்டன. உற்பத்தியும் குறைந்துவிட்டன.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், தொ.சேடர்பாளையம் கிராமத்தில் வசிக்கும் மொளசி கண்ணங்குலத்தைச் சேர்ந்த திரு.சண்முகசுந்தரம்–திருமதி விஜயா அவர்களின் புதல்வி செல்வி. ச.மோனிஷா அவர்கள் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் தமிழ்ப்பாடத்தில் 197/200 மதிப்பெண் பெற்று மாநிலத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

செல்வி ச.மோனிஷா எதிர்வரும் தொழிற்கல்வி பயிலும் காலத்தில் மென்மேலும் சாதனைகள் புரிந்திட கொங்கு நண்பர்கள் சங்கம் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

செய்தி : ஆசிரியர் தி.செ.பழநிவேல், நாமகிரிப்பேட்டை

❖❖❖❖❖